**களுத்துறை மாவட்டத்தின் 20 கமநல சேவைக் குழுக்களின் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** களுத்துறை மாவட்டத்தின் 20 கமநல சேவைக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆம் ஆண்டிற்கான களுத்துறை மாவட்டத்தில் 20 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அந்த அறிக்கைகளில் ஒரு கமநல சேவைக் குழுக்கான அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் 19 கமநல சேவைக் குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தது. அதற்கு காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்கலாக கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு இலக்கம் 99 முதல் 139 வரையான பிரிவுகளின் பிரகாரம், நிதிச் செயலாற்றல் கூற்று , தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் கணக்கீட்டுக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 19 குழுக்களின் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட ”பொதுத்துறை கணக்கீட்டு நியமம் ” களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் அனைத்து கணக்கீட்டு கொள்கைகளும் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமங் களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 20 கமநல சேவை குழுக்களின் 2022 ஆம் ஆண்டுக்கான மொத்த சம்பளச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 418,550,583 ஆன பெறுமதி அரசாங்க மானியமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாததுடன், கூட்டுத்தொகை ரூபா 678,853 ஆன அட்டுறு செலவுகள் 2022 ஆம் ஆண்டுக்கான செலவுகளாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பளச் செலவுகள் மற்றும் அட்டுறு செலவுகள் அறிவுறுத்தல் பெறப்பட்டு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டுக்கான மொத்த மீண்டுவரும் வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் அட்டுறு செலவுகள் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 18 குழுக்களில் குழுக்களால் பராமரிக்கப்படும் கோப்புகளின் மூலம் விபரங்கள் கண்டுபிடிக்க முடியாத கூட்டுத்தொகை ரூபா 122,738 ஆன போலி பொறுப்புகள் மற்றும் 17 குழுக்களின் கோப்புகளின் மூலம் தகவல்கள் கண்டுபிடிக்க முடியாத கூட்டுத்தொகை ரூபா 2,891,826 ஆன போலி சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என பதிவு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | ஏற்றுக் கொள்கின்றேன். இந்த போலி சொத்துக்கள் மற்றும் போலி பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த போலி சொத்துக்கள் மற்றும் போலி பொறுப்புகள் கணக்குகளிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் ஏக்கர் வரி வருமானத்தைக் கணக்கிடும் போது, 08 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 115,779 ஆன வருமானம் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் , மேலும் 09 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 177,798 ஆன மொத்த வருமானம் அதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் கண்டறியயப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏக்கர் வரி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக்கூற்றில் இருப்புக்கள் பதிவு செய்யப்பட்டபோது 12 குழுக்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 251,686 ஆன காலாவதியான விதைகள், நாற்றுகள், உரங்களின் இருப்பு போன்றன பயன்படுத்தக்கூடிய விளைவற்ற இருப்புக்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | இக்காலாவதியான இருப்புக்களை நீக்குவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | காலாவதியான இருப்புக்கள் நீக்கப்பட்டு பயன்படுத்தக்கூடிய இருப்புக்கள் மாத்திரம் இருப்புக்களாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் மெதஉயன்கொட கமநல சேவைக் குழுவில் CCTV கெமரா முறைமையொன்றின் பெறுமதி | 2023 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 208,220 மூலதனமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது மேலதிக செலவொன்றாக கணக்கீடு செயயப்பட்டிருந்ததால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப் பெறுமதியில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) மதுரவாலா குழுவின் கீழான ”ரெமுண” ஏரி புனரமைப்பு செயற்திட்டத்திற்காக மொத்தம் ரூபா 16,896,605 செலவிடப்பட்டிருந்ததுடன் , மொத்தம் ரூபா 17,660,256 ஆன வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. இவ்வருமானம் மற்றும் செலவுகள் நிதி செயலாற்றல் கூற்றில் பதிவு செய்யப்படாததுடன், தேறிய பெறுமதி ரூபா 763,651 மீதியானது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துகளாக தவறாகக் கணக்கிடப்பட்டுள்ளது. | தேறிய பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | வருமானம் மற்றும் செலவகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட முடியாது என்பதுடன், தனித்தனியாக இவ்விபரங்கள் வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். |

## 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கடன் கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 குழுக்களின் 22 கணக்கு விடயங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனோடொத்த அறிக்கைகளுக்கு இடையே, மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 676,712 இணங்காமல் காணப்பட்டது. | 2023 கணக்கு அறிக்கைகளில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 கமநல சேவைக் குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளுக்கும் 2022 ஆம் ஆண்டில் நாளேட்டுப் பதிவுகள் கணக்கிடப்பட்டபோது நாளேட்டு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்படாமல், அங்கீகாரம் பெறப்படாலும் நாளேட்டுப் பதிவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டில் நாளேட்டு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு கணக்கீடு செய்யப்படும். | ஆதார சான்றுகளுடன் நாளேட்டு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு நாளேட்டில் பதிவு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 28,276,248 பெறுமதிக்குரிய பங்குகள, வைப்புக்கள் மற்றும் காசோலை பதிவேடுகள், வங்கி இணக்கக்கூற்று,சிறிய தொகுதி வைப்பு பதிவேடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு, கடன் மீதி பதிவேடு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ் போன்ற எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமையால் அக் கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | உரிய அட்டவணைகள் மற்றும் எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் சான்றுகள் 2023 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் எழுத்து மூலமான சான்றுகள சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் | | | |
| (i) | 21 ஆம் பிரிவு | 20 கமநல சேவைக் குழுக்கள் இந்தப் பிரிவின் பிரகாரம் நெல் உரிமையாளர்கள் மற்றும் சிறு விவசாயிகள் பயன்படுத்தும் காணியின் அளவு தொடர்பான பெயர்ப்பட்டியலைத் திருத்துவதற்கு ஆண்டுதோறும் விண்ணப்பங்கள் பெறப்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை நாளதுவரையாக்கப்படாத 135 விண்ணப்பங்கள் காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கின்றோம். | கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 56 ஆம் பிரிவு | 20 கமநல சேவைக் குழுக்களின் மூலம் சட்டபூர்வமாக அறவிடப்பட வேண்டிய அனைத்து ஏக்கர் வரித் தொகையும் குறிப்பிட்டவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 | குழுக்களின் கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனைகள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டு அந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பொருட் கணிப்பீட்டில் இனங்காணப்பட்ட பழுதடைந்த பொருட்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிட மிருந்து பிணை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) 10 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 3,786,075 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டில் அக்குழுக்களின் இலாபங்களின் கூட்டுத்தொகை ரூபா 858,992 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அந்த 10 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 2,927,083 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தமை, நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை, விற்பனை நிலைய வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

அத்துடன் 04 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 439,808 ஆன இலாபமொன்றாக இருந்த போதிலும், அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் அந்த 04 குழுக்களின் நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 508,304 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அந்த 04 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 948,112 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தமை, உர வருமானம் அதிகரித்தமை, திருத்தச் செலவுகள்

குறைவடைந்தமை, கட்டண வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

(ஆ) 03 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 1,765,550 ஆன நட்டமொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் அந்த 03 குழுக்களின் இலாபங்களின் கூட்டுத்தொகை ரூபா 3,719,173 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அந்த 03 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 5,484,723 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு மண் விற்பனை வருமானம் குறைவடைந்தமை, ட்ராக்டர் திருத்தச் செலவுகள் அதிகரித்தமை, எழுதுகருவிகள் செலவு அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.
அத்துடன், 03 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 267,221 ஆன நட்டமொன்றாக இருந்த போதிலும், அதனோடொத்த முன்னைய ஆண்டில் அந்த 04 குழுக்களின் நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 331,706 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அந்த 03 குழுக்களின் நிதி விளைவுகளில் ரூபா 64,885 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தமை, விற்பனை வருமானம் அதிகரித்தமை, உர வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

(இ) 20 கமநல வங்கிகளின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 3,191,040 ஆன இலாபமொன்றாக இருந்த போதிலும், அதனோடொத்த முன்னைய ஆண்டில் அந்த 20 வங்கிகளின் இலாபங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,541,108 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அந்த 20 வங்கிகளின் நிதி விளைவுகளில் ரூபா 649,932 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு செயற்திறனாக விவசாயிகளுக்கு கடன் வழங்கியமை மற்றும் வங்கிச் செலவுகள் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 சிறு போகத்தில் யூரியா உர விநியோகத்தின்போது விவசாயி உரம் வழங்குவதற்கு தகுதியானவர் எனப் பரிந்துரைக்கும் வகையில், திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக விவசாய ஆலோசகர், கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளரால் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் ஆதரவைப் பெறுவதற்கான வேலைத்திட்டமொன்று, தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 20 குழுக்களுக்கும் அத்தகைய திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். | அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 12 கமநல சேவைக் குழுக்களின் மொத்த பெறுமதி ரூபா 186,240 | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு | கணக்காய்வு கட்டணம் குறிப்பிட்ட |

| | | | |
|---|---|---|---|
| | ஆன கணக்காய்வு கட்டணம் சட்டத்தின்படி 2023 ஒக்டோபர் மாதம் வரை செலுத்தப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | 12 குழுக்களுடன் தொடர்புடைய 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பெறப்பட்ட 726 விவசாயிகளின் முறைப்பாடுகளில் 168 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்படவில்லை. | தீர்வு காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விவசாயிகளின் முறைப்பாடுகளுக்கு குழுக்களால் விரைவில் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | 11 குழுக்களால் பராமரிக்கப்பட்டு வருகின்ற காணிகளை உரிமையாக்குவதற்கு பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. | காணிகளை உரிமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பதிலின் பிரகாரம் உரிமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாகொட குழுவின் அதிகாரப் பிரதேசத்தில் கனிம வளங்கள் அகழ்வு நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் நிர்ணயிக்கப்பட்டபடி முழுமையாக மூடப்படாத 04 குழிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கனிம வளங்களை அகழ்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் படி, குழிகளை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்படாமை தொடர்பாக குழுவினால் எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிலைமை தொடர்பாக அகழ்வாராய்ச்சி செய்கின்ற நபர்களுக்கு தெரிவிக்கப்படடுள்ளது. | ஒப்பந்த பிரகாரம் குறிப்பிட்ட காணியை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு பணிகளுக்காக மில்லனியா கமநல சேவைக் குழுவிற்கு பெறப்பட்ட மொத்தம் ரூபா 1,605,166 தொகையான பிணை வைப்புத்தொகை அரச வங்கியொன்றின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்படடிருந்தது. முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் , மீளாய்வாண்டு 2022 ஆம் | 2023 ஆம் ஆண்டில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரமொன்று பெறப்பட்டு பணம் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்படுதல் பொருத்தமானது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் இறுதி வரையிலும், இந்த நீண்ட கால பிணை வைப்புத் தொகை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாமல் குறைப்பயன்பாடுடையதாக காணப்பட்டது. | | |
| (ஆ) | இங்கிரிய குழுவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2015/2016 ஆண்டுகளில் பெறப்பட்ட மீதித் தொகையான மொத்தம் ரூபா 209,380 தொகையொன்று குழுவின் நடைமுறைக் கணக்கில் பயனுள்ள நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் குறைப்பயன்பாடுடையதாக காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட இத்தொகையை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மத்துகம குழுவிற்குரிய வயல்களில் மணல் அள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டபோது மீள செலுத்தப்படுகின்ற பிணையாக பெறப்பட்ட ரூபா 600,000 மற்றும் சட்ட நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்பட்ட வயல்களுக்கு மீளப்பெறக்கூடிய வைப்புத்தொகையாக பெறப்பட்ட ரூபா 300,000 உட்பட மொத்தம் ரூபா 900,000 ஆன பிணை வைப்புத் தொகை விடுவிக்கப்படும் வரை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாமல் வங்கி நடைமுறைக் கணககொன்றில் குறைப்பயன்பாடுடையதாக காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றோம். | நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற இத்தொகையை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்,ஆதனம் பொறி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மேல்மாகாண விவசாய திணைக்களத்திடமிருந்து 2006 ஆம் ஆண்டில் 02 குழுக்களுக்காக பெறப்பட்டிருந்த 02 கைட்ராக்டர்கள் 2023 ஆம் ஆண்டு கணக்காய்வு செய்யப்பட்ட வருடம் வரையிலும் வேலை செய்யக்கூடிய நிலையில் இருந்த போதிலும் பயனுள்ள வேலைகளுக்கு பயன்படுத்தப்படாமல் அவை குறைப்பயன்பாடுடையதாக காணப்பட்டன. | உடன்படுகின்றோம். எதிர்காலத்தில் பாவனைக்கு எடுக்கப்படும். | பயனுள்ள பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் 02 குழுக்களுக்கு வழங்கப்பட்ட பயன்படுத்தக்கூடிய | திறப்பதற்கான அறிவுறுத்தல் கோரப்பட்டுள்ளது. | அறிவுறுத்தல் பெறப்பட்டு திறக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | நிலையில் உள்ள 02 பெட்டகங்கள் திறக்க முடியாத காரணத்தினால் சுமார் 10 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | | பாவனைக்கு எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | விவசாய அபிவிருத்தி திணைக்களம் மொத்தப் பெறுமதி ரூபா 3,292,260 செலவில் பாணந்துறை மற்றும் கனன்வில குழு வளாகத்தில் ஹெல போஜுன் ஹல என்ற பெயரில் 02 சிற்றுண்டிச்சாலைகளை நிர்மாணித்திருந்தது. 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஒக்டோபர் மாதம் வரை, இந்தக் கட்டிடங்கள் எந்த உற்பத்தி நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற சொத்துகளாக காணப்பட்டன. | உடன்படுகின்றோம். | இந்த சிற்றுண்டிச்சாலைகள் பயனுள்ள பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பமுனுகம குழு வளாகத்தில் நன்னீர் மீன் வளர்ப்பிற்காக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கிகள் பயனுள்ள வேலைகளுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கின்றோம். | இந்த நீர்த்தாங்கிகள் பயனுள்ள பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 20 குழுக்களில் இரவு சேவை தடவைக்காக மட்டுமே காவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதால், அவர்கள் காலையில் பணி முடிவடைந்து பணி தொடங்கும் நேரத்திற்கிடைப்பட்ட காலப்பகுதியில் காவலாளியொருவர் இல்லாமையால் குழுவிற்குச் சொந்தமான வளங்கள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டன. | இரண்டு காவலர்கள் இருக்க வேண்டிய போதிலும் , பணியாளர்கள் வழங்கப்படவில்லை. | காலை 06 மணி முதல் மாலை 06 மணி வரை வளங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 20 குழுக்களுக்கான 458 விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் அபிவிருத்தி பிரிவுகள் காணப்பட்டதுடன் , குறிப்பிட்ட பிரிவுகளுக்காக இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை 363 ஆக இருந்தமையால், 95 பிரிவுகளில் பதில் கடமை நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. | பணியாளர்கள் பற்றாக்குறையால் பதில் கடமை நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. | பிரிவுகளில் விவசாயிகளின் சேவை முறையாக மேற்கொள்ளப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குழுக்களுக்கான செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், 2022 | 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை | 2023 ஆம் ஆண்டிற்கான திட்டம் 2022 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 இல் பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற இலக்குகளுடன் ஒப்பிட்டு பரீட்சிக்கும் வகையில் அத்திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. மேலும் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. | எடுக்கப்படும். | எழுத்துப்பூர்வமாக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**5. கமநல வங்கிகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 13 கமநல வங்கிகள் மூலம் 248 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 7,714,341 ஆன கடன் மற்றும் வட்டித்தொகை அறவிடப்படாமையால் நியாய சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன. 2022 திசெம்பர் 31 இல் மொத்தம் ரூபா 558,425 ஆன தொகையொன்று மட்டுமே அறவிடப்பட முடியுமானதாக இருந்ததால் அத்திகதியில் ரூபா 7,155,916 அறவிடப்பட முடியாமல் காணப்பட்டது. ஆனால் நீண்ட நாட்களாக அறவிடப்பட முடியாத நிலையில் காணப்பட்ட இந்நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கனான்வில கமநல வங்கிப் பிரிவின் மூலம் விவசாய கம்பனியொன்றுக்கு மொத்தம் ரூபா 854,900 ஆன தொகையொன்று இரண்டு தடவைகளில் வழங்கப்பட்டிருந்தது. உப பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் 2000 ஒக்டோபர் 20 ஆம் திகதி முதலாம் தவணையாக ரூபா 450,000 வழங்கப்பட்டிருந்ததுடன், கடன் தவணைகள் மற்றும் வட்டி எதுவும் அறவிடப்படாதிருந்தும் , 2000 திசெம்பர் 19 ஆம் திகதி ரூபா 404,900 ஆன மீதித்தொகையும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அக்கடன் மற்றும் வட்டித் தொகை 2023 ஒக்டோபர் கணக்காய்வுத் திகதி வரை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 04 கமநல வங்கிகளில் 2022 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட 04 வங்கி நடைமுறைக் கணக்குகளுககான 2022 ஆம் ஆண்டிற்கான வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.